# ஜூன் 9 முதல் வேலைநேரங்களில் மாற்றம்!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 112

யாழ்ப்பாணம் வைகாசி 21 [illegible] 10 வெள்ளிக்கிழமை (4-6-71)

கோட்டை, வியாழன்

பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள், தனியார் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் வேலைநேரம் இம்மாதம் 9-ம் திகதி முதல் மாற்றப்பட்டுள்ளது. மந்திரிசபை இந்த முடிவை இன்று எடுத்தது. இந்த வேலைநேரத்துக்கு ஏற்ப பஸ், ரயில் நேர அட்டவணைகள் மாற்றப்படும்.

இருநேரப்பாடசாலைகள் காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் மாலை 3-30 மணிக்கு முடிவடையும். மதிய போசன இடைவேளை 11-30க்கும் 12-30க்கும் இடையில் விடப்படும். இருநேரப் பாடசாலைகள் காலை 7-30க்கு ஆரம்பமாகி பிற்பகல் 1-30 மணிக்கு முடிவடையும். இந்தப்பாடசாலைகளுக்கு 20 நிமிட இடைவேளை இடையில் விடப்படும்.

ஒரே பாடசாலையில் இருநேர பாடசாலை நடாத்தும் பாடசாலைகள் காலை 7-30க்கு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு முடிவடையும். பிற்பகல் பாடசாலை 1-30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முடிவடையும். குறுகிய 15 நிமிட நேர இடைவேளை விடப்படும்.

(6-ம் பக்கம் பார்க்க)

## தொழிலாளியின் அனுமதியின்றி வேலைநீக்க முடியாது!

கோட்டை, வியா

தொழிலாளி ஒருவரை வேலையிலிருந்து நீக்குவது தொடர்பான மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது, தண்டனை தவிர்ந்த ஏனைய காரணங்களுக்காக தொழிலாளியின் முன் சம்மதமின்றியோ தொழில் ஆணையாளரின் சம்மதமின்றியோ வேலை நீக்கம் செய்ய முடியாது என்று இம் மசோதா தொடர்பாக தொழில் அமைச்சர் திரு எம் பி டி சற் ஸ்ரீ வர்த்தன பேசுகையில் கூறினார், ஆட்குறைப்பு செய்யவேண்டுமானுலுகூட குறிப்பிட்ட தொழிலாளியின் அனுமதியின்றியோ, தொழில் ஆணையாளரின் அனுமதியின்றியோ வேலை நீக்கம் செய்யமுடியாது என்றார்,

நியமன எம் பி திரு அஸீஸ் பேசுகையில் இந்தச்சட்டத்தை பாராட்டிப் பேசினார்- முற்போக்கான நடவடிக்கை என்றார்,

திரு பிரின்ஸ் குணசேகரா பேசுகையில்வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளவும் சட்டம் இடம்தர வேண்டுமென்றார்.

## புங்குடுதீவில் கோரச் சம்பவம்

# கள் அருந்திய 7 பேர் துடி துடித்துமாண்டனர்

## விற்றவரும் பலி!

ஊரதீவு, வியாழன்

கள் அருந்திய 7 பேர் ஒரேயடியாக துடிதுடித்து மாண்டனர். இச்சோக சம்பவம் புங்குடுதீவில் நடைபெற்றுள்ளது.

புங்குடுதீவில் ஊரதீவு என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் காலை கள் அருந்துவதற்காக கள்ளுக் கோட்டில் ஒன்றுக்குச் சென்றவர்களுக்கே இந்தக் கதி நேர்ந்தது. கள்ளுக் கொட்டிலின் சொந்தக்காரரும் கள்ளுக்குப் பலியானார்.

கள் அருந்திய 8 பேரில் ஒருவர் மட்டும் உயிர்தப்பியுள்ளார். இவர் இப்போது யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்

நச்சுத்திராவகம் கலந்திருந்த கள்ளைப் பருகியதனுல் இவர்கள் மரணமானதாக கூறப்படுகிறது.

கள் அருந்திய 7 பேர் சில மணி நேரத்தில் மாண்ட செய்தி ஊர்காவற்றுறைப் பொலிசார் மூலம் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டனுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. பெரேரா ஸ்தலத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினுர்

செ. நாகராசா(45), சி. ஏகாம்பரம் (34), பொ திருநாவுகரசு(33), மு. பொன்னுச்சாமி(75) சி. முருகேசு(70), வே. நல்லையா, (45) சி. சின்னையா(34), ஆகிய7பேருமே இவ்விதபரிதாப மரணத்துக்குள்ளானவர்களாவர்

முதலில் கள் அருந்திய ஒருவர் கள்ளின் சுவையில் ஏதோ மாற்றமிருப்பதாகக் கூறியதாகவும் அப்போது நல்ல கள் என்று நிரூபித்துக் காட்டுமுகமாகக் கொட்டில் சொந்தக்காரரான திரு வாதிரை அந்தக் கள்ளைக் குடித்துக்காட்டியதாகவும் பின்னர் அங்கு வந்த அனைவரும் அதை அருந்தியதாகவும் சில மணி நேரத்தின் பின்னர் 7பேரும் மயக்கமுற்று ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவருகிறது. இது சம்பந்தமாகச் சந்தேகத்தின் பேரில் தந்தையும் மகனுமாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. இலேந்திரன் தலைமையிலான கோஷ்டி புலன்விசாரணை செய்துவருகிறது நேற்று முன்தினம் தொடக்கம் ஊரதிவு கிராமமே ஆருச்சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

(மேலும் விபரம் 6ம்பக்கம்)

### ஊரடங்கும் நேரம்

இன்று மாலை 7-30 முதல் நாளை காலை 4-30 வரை

## பயிற்சிக் கல்லூரிகளுக்கு இனிச் செல்லவேண்டியதில்லை

# தபால் மூலம் ஆசிரியர்க்கு பயிற்சி அளிக்கப்படும்

கோட்டை, வியாழன்

ஆசிரியர்களுக்கு தபால் மூலம் பயிற்சி அளிக்க கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. நாடெங்கிலும் முள்ள பயிற்சி பெருத அரசாங்க பாடசாலை ஆசிரியர்களுக்கே இப்பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சி பெருத ஆசிரியர்கள் 35 ஆயிரம் பேர் இருக்கிருர்கள். இவர்கள் இப்பயிற்சித்திட்டத்தின் மூலம் பயன்பெறுவார்கள். பயிற்சிக்கல்லூரிகளிலிருந்து பயிற்சி பெற்று வெளியேறும் ஆசிரியர்கள் பற்றாக்குறை மிகக்கூடுதலாக இருப்பதாலேயே கல்வி அமைச்சு இந்நடவடிக்கையை மேற்கொள்ளவிருக்கிறது.

இப்போது ஐயாயிரம் ஆசிரியர்களே பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சிபெற்று வருகிருர்கள். இவர்கள் பயிற்சி பெற்று வந்தாலும் பாடசாலைகளுக்கு வேண்டிய பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவையைச் சமாளிக்கமுடியாதாம்

தபால் மூலம் பயிற்சி அளித்தபின்னர் இந்த ஆசிரியர்கள் எழுத்துப்பரீட்சை

(6-ம் பக்கம் பார்க்க)

## பர்மிட்டுகள் ரத்து; யூனியனுக்கு விற்கலாம்

# வெங்காயம் கொண்டுசெல்ல முற்றுக தடை!

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆனையிறவுக் கூடாக சின்ன வெங்காயம் கொண்டுசெல்வதற்கு முற்றுகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா அறிவித்துள்ளார்

சின்ன வெங்காயம் கொண்டுசெல்வது தொடர்பான பர்மிட்டுகள் வழங்கப்படமாட்டாதென்றும் அறிவிக்கப்படுகிறது

சின்ன வெங்காயத்தைக் கொண்டுசெல்வதற்கு ஏற்கனவே வழங்கப்பட்ட 'பர்மிட்'களும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. விதை உபயோகத்துக்குக்கூட பர்மிட்டுகளும் வழங்கப்படமாட்டாது

பல வர்த்தகர்கள் இதனைத் தவருன வழியில் உபயோகித்ததைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதை உபயோகத்துக்கான சின்ன வெங்காயத்தைக் கொழும்புக்கும் மற்றும் பகுதிகளுக்கும் கொண்டு சென்று 'கறுப்புச்சந்தை'யில் விற்கிருர்களாம்

வெங்காய உற்பத்தியாளர்கள் தங்களிடமுள்ள வெங்காயத்தைபோ விதை வெங்காயத்தைபோ யாழ். மாவட்ட விவசாயகூட்டுறவு யூனியனுக்கு விற்பனை செய்யலாமென்றும், விதைவெங்காயம் தேவைப்படுவோருக்கு மேற்படி யூனியன் விநியோகிக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது. மற்றைய மாவட்டங்களுக்கும் யூனியன் விதை வெங்காயத்தை விநியோகிக்கும் குவிம

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கார்:
டாக்டர் வெளிநாடுசெல்வதால் சொந்தப் பாவிப்பிலுள்ள ஒஸ்டின் கார் விற்பனைக்குண்டு. வெள்ளிக்கிழமை காலை 9மணி-12மணி வரையும் பிற்பகல் 3 மணி தொடக்கம்5மணிவரைபார்வையிடலாம். பாலசுந்தரம், இணுவில் ஆஸ்பத்திரி. 3148

### FOR SALE

32 Bass Crucinelli piano accodian in good condition. Colour pearl blue. What offers. Owner bought a bigger accodian. Contact S. Pancharatnam, Teacher, Urumpirai South, Urumpirai. 3145

### தேவை

சுன்னுக சந்தியிலிருந்து 5 மைல் விஸ்தீரணத்திற்குள் 30 அல்லது 40 பரப்பு வெறும் காணி விவசாயத்திற்கு தேவை. இருக்குமிடம், போக்குவரத்து வழி, வான் பயிர்கள் தொகை, தண்ணீர் வசதி, விலை முதலிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 3150, C/o "ஈழநாடு". யாழ்ப்பாணம். 3150

### தேவை

தேசவுநிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு தேசவில் அனுபவமுள்ள ஆசிரியை தேவை. 15-6-71க்கு முன் விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம் 3151, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 3151

தெல்லிப்பழையில் விஞ்ஞான, கணித பாடங்களில் தனியார் வகுப்புகள் நடத்த ஆசிரியர்கள் உடனே தேவை. தே. து. ஜெயரத்தினம், தெல்லிப்பழை. 3149


## கண்வலிக்கு கைகண்டமூலிகை

சென்னை, ஜூன் 3

அறுகம்புல்லை அரைத்து தினசரி காலையில் தலையில் தேய்த்துக் குளிக்கவும்.

அறுகம்புல்லை அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து பசும்பாலில் கலந்து வடிகட்டி காலை மாலை உட்கொண்டால் கண்வலி நீங்கும். அன்று புளி காரம் நீக்கவும், மோர்சாதம் சாப்பிடவும் குணம் காணலாம் என மயிலை தமிழ் சித்த வைத்திய மறுமலர்ச்சி மன்றம் தெரிவித்துள்ளது.


## சுங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ந் திகதி காலை 10-30 மணிக்கு யாழ்ப்பாணம் சுங்க அலுவலகத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். விற்பனை நிபந்தனைகள், 1954-ம் ஆண்டு மே மாதம் 28-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் (பகுதி 1 தொகுதி 2) தரப்பட்டுள்ளது. மேற்படி நிபந்தனைகள் ஏலம் தொடங்குமுன்னர் கேள்விதாரர்களுக்கு அறிவிக்கப்படும். பொருட்களை விற்பனைத் தினத்தன்று காலை 9-30 மணிக்கும் பார்வையிடலாம். விற்பனை 17-ம், 18-ம் திகதிகளில் காலை 9 மணிக்குத் தொடர்ந்து நடைபெறும்.

எஸ். எம். ஜே. சேனரத்ன
ஒப்பம்.
யாழ். மாவட்ட
சுங்க சேகரிப்பாளருக்காக

1. 15 மூடை சாம்பு.

2825


## பொன் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 13-ந் திகதி காவலூர் புனித அந்தோனியாரின் உற்சவ தினத்தன்று அங்கு சமயப்பணியாற்றி வரும் பிதா அகஸ்தீன் அடிகளாரின் 50-ம் ஆண்டு பொன்விழா கொண்டாடப்படவிருக்கிறது.

அடுத்தநாள் ஊர்காவற்றுறை தேவதாயாரின் கோவிலில் மேற்படி அடிகளாரின் பொன்விழா அவ்வூர் மக்களால் கொண்டாடப்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

ஏழாலை அம்பலவாணேஸ்வரர்

# சித்திரத் தேர் இன்று வெள்ளோட்டம்

யாழ்ப்பாணத்துப் புராதனப் பெருமைபெற்ற பதிகளுள் ஒன்று ஏழாலை. யாழ் வலி வடக்கில் மல்லாகத்திற்கும் புன்னாலைக்கட்டுவனுக்கும் இடையில் உள்ளது இப்பதி. யாழ்ப்பாண தமிழரசர் காலத்தில் இருந்தே சைவத் தமிழ்க்கலாசாரத்தில் உறுதி பூண்ட தமிழ்க்குடிகள் இங்கு வாழ்ந்து வந்துள்ளன. போத்துக்கீச, ஒல்லாந்த ஆட்சிக் கெடுபிடிகளினுல் கலாசாரத் தலை தடுமாற்றங்களுக்கு அசைந்துகொடுக்காத அளவுக்கு அவர்களிடம் சொந்தக் கலாசாரப் பற்றும் உறுதியும் ஏற்பட்டிருந்ததாக தெரிகிறது. தமது சைவத் தமிழ்க்கலாசார அழுத்தத்திற்கிணங்க அவர்கள் மேம்பாடான முறையில் வழிபட்டு வந்த பிரசித்தமான ஏழு சைவாலயங்கள் இப்பதியில் இருந்துள்ளன. அதுபற்றினாற்கு ஏற்பட்ட 'ஏழாலயம்' என்ற பெயரே காலகதியில் மருவி 'ஏழாலை' என வழங்கலாயிற்று. மற்றெக் காரணமும் நோக்காது ஆலயங்களையே காரணமாகக்கொண்டுளர்ப் பெயர் ஏற்பட்ட அமைதியை நோக்கும்போது அவ்வாலயங்களேழும் தனிப்பட்ட முறையான ஒரு வகையுயர்வுப் பிரசித்தியும் பெற்றவையாய் இருந்திருக்கின்றன என்னும் உண்மை புலனுகும். இந்த உண்மைக்கு இன்னும் கண்கண்ட காட்சிகளாய் இலங்கிக் கொண்டிருப்பது குறித்த ஏழாலயங்களில் ஒன்றென ஐயத்திற்கிடமின்றித் தெளியப்பட்ட பெரியதம்பிரான் கோயில். இது ஊர் மத்தியில் பரந்தகன்ற பெரிய வயல் வெளியில் ஒரு பக்கத்திலே விளங்கும் நீராழியான பெருங்குளமொன்றின் ஓரத்தில் காலங்கண்ட பழைய மருதமரச் சோலையின் மத்தியில் உளதாகும். இம்மருதமரப் பழைமையும் பெரிய தம்பிரான் கோயிற்புதுமையும் என்றும் பிரசித்தமானவை. இன்றும் பார்த்துணரக்கிடப்பவை.

இங்ஙனம் அமைந்திருந்த தனது சைவத் தமிழ்க் கலாசார மேன்மைக்கேற்ப இவ்வூர் பிரசித்தி பெற்ற சான்றோர் பலரின் தொடர்பும் பெற்றுள்ளது. காசிவாசி, சிவஸ்ரீ செந்திநாதையர் பாரதநாடு முழுவதிலும் புகழ் பெற்றவராவர். அவர் பெற்றிருந்த வேதாகம சைவ ஞான மேன்மை விசாலத்தாலது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நன் மாணுக்கர் என்ற மேன்மைக்குரியவர் அவர். அவர் தம் ஜன்மபூமியும் இவ்வேழாலையே. பெரும் புலவரான ராவ்பஹதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையின் ஜன்மபூமியும் இவ்வேழாலையேயாம். தமது தாய்ப்பூமியாக இதனை உளங்கொண்டு அவர் அக்காலத்தில் இங்கு உயர் தமிழ்க்கலாசாலையொன்று நிறுவித் தமது சொந்தச் செலவில் 22 வருட காலம் அக்கலாசாலையை நடத்தியுள்ளார். சுன்னுகம் முருகேச பண்டிதர் ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப் புலவர் என்போர் இக்கல்லூரியில் தலைமையாசிரியர்களாகப் பணிபுரிந்துள்ளனர்.

சைவ ஞான அநுபூதிச் செல்வராகிய ஸ்ரீமத் சடைவரத சுவாமிகள் யாழ்ப்பாணத்துக் கடையிற் சுவாமிகளின் ஞான பரம்பரையில் உதித்தவர். அவர் தமது ஆரம்ப காலத்திலேயே இவ்வூரிலுள்ள ஆத்மநேயச் செல்வர்களின் நன்மதிப்பையும் சேவையையும் பெற்று இவ்வூரில் தங்கிச் சாதுசங்கம் கட்டித் தகுதியான ஒரு மடாலயமும் அமைத்துள்ளார்கள். அம்மடாலயம் இன்று, 'சமயாசாரிய சுவாமிகள் ஆதீன மடம்' என்ற பெயரில் விளங்கிச் சமயாசாரியர் நால்வரையும் சதாவழிபாடு வைத்துச் சைவ ஞான உணர்வு கொளுத்தி வருகின்றது. அவர் தம் ஞானவழித் தோன்றல்களாகிய அருணாசலசிவம் முதலியோரின் உருவும் திருவும் இவ்வூர் மக்களின் சைவத் தமிழ்க் கலாசாரப்பற்றுக்கு மென்மேலும் ஊக்கமளித்துக் கொண்டிருக்கின்றன.

### அம்பலவாணேஸ்வரர் ஆலயம்

மேற்குறிப்பிட்ட பெரிய தம்பிரான் ஆலயத்துக்கும் தாமோதரம்பிள்ளை வித்தியாசாலை இருந்த இடத்துக்கும் இடையிலே ஒன்றையொன்று மருவியெழுந்து ஒரேபுற வீதிக்குள் அமையும் சைவக்கோயில்கள் நான்கில் அம்மன் கோவிலின் வலது புறத்தில் உள்ள சிவன் கோவிலே அம்பலவாணேஸ்வரர் ஆலயம் எனப்படும். இவ்வாலயம் இற்றைக்கு ஏறக்குறைய 120 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டதென்பர். இவ்வாலயம் தற்பொழுது பரிவார மூர்த்திகளுக்குரிய சகல ஆலயங்களும் அமைந்து ஓரளவுக்குப் பூரணத்துவ நிலைபெய்தி திருவருட் சிறப்பினுல் தற்பொழுது கொடியேறி உற்சவம் நிகழ்ந்து தேர் தீர்த்தச் சிறப்புகள் காணத்தக்க அளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கின்றன.

### தேர்த்திருப்பணி

இன்று நிகழ்வது நாவலர் நூற்றாண்டு யுகம். இக்காலப் பகுதியில் பொதுவாக எல்லா ஊர்களிலும் சைவப் புத்துணர்ச்சியும், எழுச்சியும் தலை தூக்கி வருகின்றன. அவ்வெழுச்சி அலையின் ஓர் அம்சமாகப் போலும் ஏழாலை அம்பலவாணேஸ்வரருக்குச் சித்திரத் தேர் ஒன்று அமைக்கும் ஆர்வம் தலை தூக்கிற்று. அதன் விளைவாகக் கடந்த 19-8-68இல் தேர்த்திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்படலாயிற்று. இவ்வூர் அறிஞர்கள், அன்பர்கள், அபிமானிகள் அனைவரையும் அங்கத்தவர்களாகக் கொண்ட இச்சபை மிகக் கட்டுக்கோப்பான முறையில் செயலாற்றிப் பொன்னும் பொருளுந்தேடி மிகக்குறைந்த கால எல்லையிலே அதாவது 24-1-69 லேயே நாள் வேலை ஆரம்பித்து ஏழாலையைப் பிறப்பிடமாகக்கொண்டு தற்பொழுது நீர்வேலியில் வசிக்கும் செல்வரத்தினம் ஆசாரியர் தலைமையில் தேர் வேலைகள் பூர்த்தியடைந்தது.

சகல அம்சங்களும் நிரம்பிய பூரணப் பொலிவுடன் இச் சித்திரத் தேர் இன்று வெள்ளோட்டம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. தோன்றாத் துணையாய் நின்று திருப்பணிச் சபையை வழிநடத்தித் தேர்த்திருப்பணியை நிறைவேற்றி அதன் நிறைவு கண்டு சைவவுலகம் விழாக் கொண்டாடி மகிழவைத்த திருவருளுக்கு என்றென்றும் கடப்பாடுடையோம்.

--வித்துவான் மு:கந்தையா

## திருவிழா

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டி கோவிந்த பிள்ளையார் கோவில் பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறுகிறது.


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.2-00
சிவாஜி கணேசனின் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30க்கும் பி. ப. 2-00 மணிக்கும்
எம்.ஜி.ஆர். — பானுமதி நடித்த
மலைக்கள்ளன்
(புதிய கொப்பி)

வின்ஸர்— யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-00
★ சிவாஜி கணேசன் ★ பத்மினி
நம்பியார் — சுந்தரராஜன் — தங்கவேலு
ஜெயலலிதா — மனோரமா
நடித்த
குருதட்சணை

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப. 2-00 மணி
★ ஜெய்சங்கர்
★ வாணிஸ்ரீ
★ லக்ஷ்மி
நடித்த
கன்னிப் பெண்

கெபிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

லிங்ஸ்லி
காலை 10, பி.ப.2-00 மணி
நீதிக்குபின் பாசம்

ஜைலன்
காலை 10, பி.ப.2-00 மணி
நான்

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
எங்கவீட்டுப் பிள்ளை

நாகம்ஸ்சினிமா
சுன்னுகம்
Daily
10-30 a. m. & 4-30 p. m.
Robert Vaughan
David Mccallum
in
THE K ARATE KILLERS

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை10-30, பி. ப. 2-30
சிவாஜி - பண்டரிபாய் நடித்த
திரும்பிப்பார்
( புதிய கொப்பி )

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை10-30, பி.ப.1-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த
தாயைக்காத்த தனயன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 4-30 p.m.Only
Thomas Hunter
in
HILLS RUN RED

காலை 10-30 பி.ப. 2-00
காந்தாராவ்-ராஜசுலோசனா நடித்த
பாட்டி சொன்ன கதை

REGAL (Jaffna)
Daily 10-30 a m 2-00 & 4-15 p. m.
David Hemmings
in
THE WALKING STICK
( Cinemas cope - color )

# கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை: பாப்பரசர் கவலை

## அகதி முகாம்களில் காலரா பரவுகிறது

வத்திக்கான் ஜூன் 3 கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை குறித்து ஆறுவது சின்னப்பாப்பரசர் கவலை தெரிவித்திருக்கிறார். கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னையில் இனியும் தாமதம் செய்வது பெரிய அபாயமான யுத்தத்துக்கே கொண்டு போய் விடும் என்று பாப்பரசர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளுக்கு உடனடியாக உதவியளிக்கும்படி உலக நாடுகளைப் பாப்பரசர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தியாவில் தஞ்சம்புகுந்துள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் முகாம்களில் காலரா நோய் வெகு தீவிரமாகப்பரவிவருகிறது. இந்த முகாம்களை அடுத்துள்ள ஊர்களுக்கும் காலரா பரவத் தொடங்கியிருக்கிறது.

காலரா நோயைத் தடுப்பதற்கு பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் அவசர அவசரமாக மருந்துகளை அனுப்பியிருக்கிறது.

## கொமாண்டோக்களுடன் ஜோர்டான் மீண்டும் மோதல்

அம்மான், ஜூன் 3 ஜோர்டானின் மீண்டும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினருக்கும் இராணுவத்தினருக்குமிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

ஹுசெயின் மன்னரை ஆட்சிபீடத்திலிருந்து கவிழ்ப்பதற்கு பாலஸ்தீன விடுதலை இயக்க கொமாண்டோக்கள் முனைவதாக அரசாங்கம் குற்றம் சாட்டியிருக்கிறது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அழித்தொழிக்க ஜோர்டான் அரசாங்கம் முனைவதாக கொமாண்டோக்கள் பதில்குற்றம் சுமத்தியுள்ளனர்.

பலஇடங்களில் கொமாண்டோக்களுக்கும் இராணுவத்துக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டது. கொமாண்டோக்களின் முக்கிய இடத்தில் ஜோர்டான் விமானப் படையினர் குண்டு வீசியதாகவும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

பாலஸ்தீன விடுதலைஇயக்கத்தினருக்கும்ஜோர்டான் அரசாங்கத்துக்கு மிடையில் மீண்டும் மோதல் ஏற்பட்டிருப்பது குறித்து ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் அன்வர் சதாத் கவலை தெரிவித்துள்ளார்.

## முஜிபுர் ரஹ்மான் மனைவியும் கைது

ஜல்பைகுறி, ஜூன் 3 வங்காளதேசத் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மானின் மனைவியும் மக்களும் பாகிஸ்தானில்இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. டாக்காவுக்குப் பக்கத்திலுள்ள ஒரு குக்கிராமத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டனராம்.

## மானிப்பாய் ப.நோ.சங்கம்

அராலி வியா. மானிப்பாய் புதிதாக அமைக்கப்பட்ட மானிப்பாய் ப நோ கூ சங்கத்தின் நெறியாளர்களாக முன்னைநாள் கூட்டுறவுப் பகுதி சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு ஆர் இராசரத்தினம், முன்னைநாள்வலி மேற்கு ப நோ கூ ச சமாச உபதலைவர் திரு சிவமுத்துக்குமாரசாமி, திரு எஸ் தர்மசீலன், திரு டி உலகநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் இந்நால்வரும் மற்றும் உத்தியோகப்பற்றுள்ள ஐந்து நெறியாளர்களும் ஒரு குழுவாக இயங்கி மானிப்பாய்பட்டின சபை, கிராமசபை எல்லைகளுக்குட்பட்ட கூட்டுறவுக் கடைகளின் பொருள்களின் இருப்புகளை ஆரம்ப உரிமைப் பொருளாகவும் முதலீடாகவும் பொறுப்பேற்று 6ந் திகதி தொடக்கம் சங்கமாக இயக்குவர்.

## சங்கானை ப. நோ. ச. நெறியாளர் குழு

அராலி, வியாழன் புதிதாக சங்கானையில் அமைக்கப்பட்ட சங்கானை ப. நோ. கூ. சங்கத்திற்கு கூட்டுறவு ஆக்க ஆணையாளரால்நியமிக்கப்பட்டநெறியாளர்கள் நால்வராகும். அவர்கள் தற்போதைய வலி. மேற்கு ப. நோ. கூ. சங்கங்களின் சமாச தலைவர் திரு. வை. இராசசுந்தரம், உபதலைவர் திரு. வே. வி. மூர்த்தி, நிர்வாக உறுப்பினர் திரு. செ. சிவரத்தினம் சிறுபான்மைத் தமிழர்பிரதிநிதி திரு வ. தவத்துரை ஆகியோராவர். இந்நால்வரும் மற்றும் உத்தியோகப் பற்றுள்ள கைத்தொழில் பகுதி பெரும்பாக அலுவலர் திரு. க. சிவகுரு. விவசாய விஸ்தரிப்பு அலுவலர் திரு. வி. சின்னையா. பாடசாலை வட்டாரப் பரிசோதகர் திரு. பி. சச்சிதானந்தம் கிராமாபிவிருத்தி அலுவலகர் திரு. நா. நவரத்தினம் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். டி. தர்மரத்தினம் ஆகிய ஐந்து பேருமாக ஒன்பது பேரடங்கிய நெறியாளர்குழு இம்மாதம் நாலாந்திகதி தொடக்கம் செயற்படும். இந்நெறியாளர்குழு தமது முதற்கடமையாக தற்போதைய வலி மேற்கு ப நோ கூ சமாசத்தினதும் அதன் உறுப்புச் சங்கங்கள் இருபத்துநான்கினதும் டிப்போக்கள் ஏழினதும் உரிமைப் பொருட்களை இம்மாதம் 5-ந் திகதிசனிக்கிழமை இருப்பெடுத்து பொறுப்பேற்கும். ஆறும் திகதி தொடக்கம் பொருள்கள் விநியோகம் பொதுமக்களுக்கு வழமைபோல் செய்யப்படும்.

## யாழ். மீன்பிடி இலாகா அலுவலகம்

மாவிட்டபுரம், வியாழ். மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் தேவைகளையும் பிரச்னைகளையும் உடனுக்குடன் தீர்ப்பதற்காக யாழ்ப்பாணம் மீன்பிடி அலுவலகம் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது.

ஒரே ஒரு எழுதுவினைஞருடன் மீன்பிடிப் பரிசோதகர்களின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் இவ் அலுவலகத்தை விரிவுபடுத்துவதற்கு தற்போதுள்ள அலுவலகம் இடநெருக்கடியாக இருப்பதால் வேறு இடத்துக்கு இக் காரியாலயத்தை மாற்றும்படி மீன்பிடி இலாகா கேட்டுள்ளது.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 21-ந் திகதி

4- 6- 71

மேஷம்: எதிர்பார்த்த வரவில் தடை ஏற்படும். பிரயாணத்தின் போது பொருள் தழுவக்கூடும். புதிய தொழில்கள் இன்று நிறுத்திக்கொள்ளவும்.

ரிஷபம்- பொதுப்பணி உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். சிலர் வாழ்க்கையில் அரசியல் பிரவேசத்துக்கும் நாள் நிச்சயிக்கப்படலாம்.

மிதுனம்: தொழில்புரியும் இடத்தில் செல்வாக்குப் பெருகும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

கடகம்- இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று இனையதமான தினம். வாகனச்சொந்தக்காரர்கள் அதிக பயனடைவர்

சிம்மம்: பொருள் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும் புதிய முதலீடுகளை தவிர்க்கவும் நாவடக்கம் விரும்பத்தக்கது.

கன்னி: இல்லவின் பின்னவரம் இதயம் வேதனைப்படும். வீட்டில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கலாம். துக்ககரமான தினம்.

துலாம்: வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சிலர் புனைத்துறைகள் கேட்கவும் நேரிடும், பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவும்.

விருச்சிகம்: பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில்துறையில் பின்தங்க நேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு.

தனுசு: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடுசெய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

மகரம்: இதயக்கமலம் இன்பத்தால் மலரும். இல்லத்தில் பிணைப்புகள் இறுகும், கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் சிறப்பான தினம்.

கும்பம்: விவசாயத்துறை கவலையைத்தரும். மனதில் உற்சாகம் குன்றும். கால்நடைகள் விடயத்தில் கவனமாக இருக்கவும்

மீனம்: உறவினர் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும். காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஊறணி

## மீன்பிடி அபிவிருத்திக்கு ரூபா 1,57,000 கடனுதவி

மாவிட்டபுரம். வியாழன் மீன்பிடி அபிவிருத்திக்காக ஊறணி மீன்பிடிச் சங்கத்துக்கு ஒரு லட்சம் ரூபாவுக்குமேல் அரசாங்கம் கடனுதவி வழங்கியுள்ளது.

காங்கேசன்துறையை அடுத்த ஊறணியில் வசிக்கும் மீனவர்கள் தமது தொழிலை நல்ல முறையில் நடாத்துவதற்குத் தேவையான வலைகள், இயந்திரம் ஆதியன கிடைக்காமல் கஷ்டப்பட்டனர் இதையடுத்து ஊறனி புனித அந்தோனியார் கூட்டுறவு கடன் உதவிச் சங்கம் மீன்பிடி இலாகாவுடன்தொடர்புகொண்டு இதுபற்றி எடுத்துக்கூறியதன் பயனாக மீன்பிடி இலாகா வலைகள், இயந்திரம் ஆதியன வாங்குவதற்காக 1 லட்சத்து 57 ஆயிரம் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது.

## கைப்பணி வகுப்பு

சுழிபுரம், வியாழன் சங்கரத்தை மாதர் முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கைப்பணி வேலைகள் பயிற்சியளிக்குமுகமாகபுதிய வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சங்கரத்தைச் சன சமூக நிலையத்தினர் நடத்தும் இவ்வகுப்புக்கு செல்வி தேவி சின்னத்துரை பொறுப்பாகவுள்ளார். திருமதி வயிரவநாதர் ஞானரத்தினம் தலைமையில் நடைபெற்ற வகுப்பு ஆரம்ப விழாவில் திரு. த. சிதம்பரநாதன், திரு. க. வயிரவநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## பிரிவுபசாரம்

மன்னார். வியாழன் மன்னார் புனித- செபஸ்தியார் ஆலய உதவிக்குரு-வண. பிதா- பி எம் இமானுவேல் தாழங்குடா மிசாமுக்கு மாற்றலாகிச் செல்வதை யொட்டி மன்னார்ப்பகுதி கத்தோலிக்க மக்களாலும் இளைஞர்களாலும் அன்னாருக்குப் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. இவ் வாலயத்தின் புதிய உதவிக் குருவாக வண. பிதா. ஜி ஈ மைக்கல் பொறுப் பேற்றுள்ளார்.

## அந்தோனியார் உற்சவம்

மன்னார், வியா. மன்னாரிலிருந்து 2 மைல் தூரத்திலுள்ள புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இம்மாதம் 13-ம் திகதி வழமைபோல் கொண்டாடப் படவிருக்கிறது. ஆலயத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்கு விசேஷ பாதுகாப்பும், விசேஷ பஸ் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன

0 0 0

பருத்தித்துறை. புதன் வதிரி அர்ச் அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 4-ம் திகதி ஆரம்பித்து 13-ம்திகதிவரை நடைபெறவிருக்கிறது. இறுதிநாள் பாடற் பூசையுடனும், சுற்றுப் பிராகாரத்துடனும் உற்சவம் முடிவடையும்.

## இரு பிரிவாக இயங்கும்

சுழிபுரம், வியாழன் வலிகாமம் மேற்குப் பகுதியில் ஒரு சமாஜத்தின்கீழ் இயங்கிவந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் கூட்டுறவுப் புனரமைப்பைத் தொடர்ந்து இரு பிரிவாக இயங்கவுள்ளன. மானிப்பாய்க் கோவிற்பற்றைச் சேர்ந்தவை தனியாகவும் ஏனையவை சங்கானை ஆரம்ப சங்கமாகவும் இயங்குமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

மானிப்பாய்ப் பகுதியில் ஏழு சங்கங்களும், சங்கானைப் பகுதியில் இருபத்திநாலு சங்கங்களும் இயங்கும். இவற்றின் இயக்குனர் சபை விரைவாக செயல்படும்.

## தற்கொலை

சுழிபுரம், வியாழன் பண்டத்தரிப்பு செட்டிகுறிச்சியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மதிமாலதி என்ற 24 வயதும் பெண் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். வலிகாமம் மேற்கு மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். சேனாதிராசா விசாரணை நடத்திய பின்னர் பிரேத பரிசோதனை நடைபெற்றது. தற்கொலையென தீர்ப்பளிக்கப்பட்டது.

## கலைஞரின் மறைவு

பருத்தித்துறை, புதன் நெல்லியடியைச் சேர்ந்த புகழ்பெற்ற நடிகனும், சங்கீத வித்வானும், சமூகத் தொண்டனுமான கலைக்குரிசில் கந்தவனம் காலமானார். இளம் வயதிலிருந்து கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோருடன் ஒரே மேடையில் நடித்த இவர் தெல்லை சண்முகானந்த சபை நிர்வாகிகளுள் ஒருவராவார்.

## திருட்டு

பருத்தித்துறை. வியாழன் கரவெட்டி மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றிலிருந்து பெறுமதி வாய்ந்த தேசவு நூல்கள் திருடப்பட்டு விட்டதாகப் பருத்தித்துறைப் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது பருத்தித்துறைப் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். சமீபகாலத்தில் கரவெட்டிப் பகுதியில் மாடுகள், கைக்கிள்கள் தண்ணீர் இறைக்கும் பம்புக்கான முக்கிய உதிரிப் பாகங்களும் திருடப்பட்டிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. கடந்த மாதம் ஒரு பாடசாலையிலிருந்து மர வேலைக்கான ஆயுதங்கள் திருடப்பட்டதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

0 0 0

தாவடி, வியாழன் தாவடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கடையில் நேற்று முன்தினம் இரவு திருட்டுப் போயுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. சேட்வகைகள் பல்மா வகைகள் பெருமளவில் திருடப்பட்டுள்ளதாகவும், கூரை பிரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

## இளைஞன் தற்கொலை

மாவிட்டபுரம், வியாழன்

உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லையே என்று மனமுடைந்திருந்த 28 வயது இளைஞர் ஒருவர் இடுமிநாசினி அருந்தி உயிரை மாய்த்துக்கொண்டார். வீமன்காமத்தைச் சேர்ந்த பொ. பஞ்சதேவு என்னும் இளைஞனின் மரண விசாரணையின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைக்கவில்லையே என்று மனமுடைந்து முன்பு பல தடவை இவர் தற்கொலை செய்ய முயற்சித்ததாகவும் கூறப்பட்டது.

மரணமானவரின் சகோதரரும் மற்றும் பலரும் சாட்சியம் அளித்ததைத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பற்று மரண விசாரணை அதிகாரி திரு எஸ். சுந்தரமூர்த்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். விசாரணைக்கான ஏற்பாடுகளை காங்கேசன்துறை பொலிஸ் பகுதி கான்ஸ்டபிள் பண்டாவும், கிராம சேவையாளர் எஸ். நடராசாவும் செய்திருந்தனர்.

## உற்சவம்

மாவிட்டபுரம், வியாழன்

அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. தேர் உற்சவம் இம்மாதம் 7-ந் திகதியும், தீர்த்த உற்சவம் 8-ந் திகதியும் நிகழும்.

—

தாவடி, வியாழன்

கட்டப்பிராய்ப் பகுதி சைவ இளைஞர்களின் அயரா உழைப்பினாலும், வட்டார அங்கத்தினரின் முயற்சியினாலும் கட்டப்பிராய் முத்துமாரியம்மன் கோவிலுக்கு இப்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் 'பி' பிரிவின் முடிவுகள் சில வருமாறு:-

### யாழ்: பொலிஸ் வெற்றி

யாழ் பொலிஸ் கோஷ்டிக்கும், ஆனைக்கோட்டை யூனியன் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் பொலிஸ் கோஷ்டி 1—0 கோல்களால் வெற்றிபெற்றது.

### சம்கன் வெற்றி

யாழ்ப்பாணம் சங்கன் விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ். கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்ற போட்டியில் சம்கன் கழகம் 6—0 கோல்களால் வெற்றி பெற்றது.

(தே. நி)

## காணிக்கச்சேரி

மாவிட்டபுரம், வியாழன்

விசுவமடு படித்த வாலிபர் குடியேற்றத் திட்டத்துக்கான வலி-மேற்கு காணிக்கச்சேரி நேற்று வலி-மேற்குக் காரியாதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது. மாவட்ட காணி அபிவிருத்தி அதிகாரி திரு. கே. பொன்னம்பலத்தினால் நடாத்தப்பட்ட இக்காணிக்கச்சேரியில் சுமார் 600 இளைஞர்கள் கலந்துகொண்டார்கள்.

—...

தாவடி, வியாழன்

தாவடிப் பகுதியில் நாய்களின் தொல்லை அதிகரித்து வருவதால் பாதசாரிகளும் மற்றும் சைக்கிளில் செல்பவர்களும் மிகுந்த அசௌகரியத்துக்குள்ளாகியுள்ளனர்.

## நெடுந்தீவில் மீன்பிடிப் பயிற்சி

மாவிட்டபுரம், வியா

நெடுந்தீவில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் மீன்பிடித் தொழிலையே மேற்கொண்டிருப்பதினால் வருங்காலத்திலும் மீன்பிடித் தொழில் இங்கு வளர்ச்சி பெற சகல இளைஞர்களும் இத்தொழில் பற்றிப் பயிற்சியில் ஈடுபடவேண்டும் என்று நெடுந்தீவு காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெற்ற மீனவர் அபிவிருத்தி பற்றிய விசேடகூட்டத்தில் பேசிய தீவுப்பகுதி மீன்பிடி கூட்டுறவு அபிவிருத்தி பரிசோதகர் திரு. க. தேவராஜா கூறினார்.

நெடுந்தீவுப் பகுதி மீனவர்கள் இதில் கலந்து கொண்டு தமக்குள்ள குறைகளை எடுத்துக்கூறினர். சேதமடைந்துள்ள நெடுந்தீவு

(5-ம் பக்கம் பார்க்க)


# கவனியுங்கள்!

இவையே புதிய யானை மார்க்
குளிர்பான லேபல்கள். இவற்றுள் சில
இதுவரை வெளியாகியுள்ளன; மிகுதி
விரைவில் வெளிவரும்...

எனவே விழித்திருங்கள்!




GRANT 987 (267)

# ஜூன் 30-ல் காரீய சுரங்கம் சுவீகரிப்பு

கோட்டை, வியாழன் தனியார் துறையினரிடம் இருந்து வந்த காரீய வழங்களை இம்மாதம் 30ந் திகதி அரசாங்கம் கையேற்க விருக்கிறது

1942ம் ஆண்டு இலங்கையில் 452 காரீய சுரங்கள் இருந்த போதிலும் இவை தவறுதல் வழியில் செயற்பட்டு வந்தமையால் இன்று மூன்று காரீய சுரங்கங்கள் மட்டுமே இயங்கி வருவதாகவும் இதை சீர்ப்படுத்தும் நோக்கத்துடன் இவற்றை சுவீகரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகவும் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சு தெரிவித்துள்ளது.

காரீய சுரங்கங்களை புனரமைப்புச் செய்யும் மூகமாக கைத்தொழில் விஞ்ஞான அமைச்சு அதற்கின் சகல உரிமைகளையும் பொறுப்பேற்க விருக்கிறது.

## உள்ளூராட்சி மன்ற ஊழியர் 60 வயது சேவை

சுழிபுரம், வியாழன் உள்ளூர் மன்றங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் அறுபது வயது வரை கடமையாற்ற அனுமதிக்கப்படுவர் என்ற ஒரு சுற்றுநிருபத்தை சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உள்ளூராட்சி ஆணையாளர் அனுப்பி வைத்துள்ளார் இதன் பிரகாரம் அனேக ஊழியர்கள் தொடர்ந்தும் தமது கடமையை செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## அமைச்சரை வரவேற்று மகஜர்

குருநகர், வியா நெக்கிளஸ்மேசன் இரண்டாவது குடியேற்றத் திட்டத்தில் சனசமூக நிலைய சுற்றாடலில் வசிக்கும் வீடற்றவர்களுக்கு காணி வழங்க வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை வீடமைப்பு அமைச்சரிடம் புனித ஆரோக்கியநாதர் சனசமூக நிலையத்தினர் கையளித்தனர்.

வீடமைப்பு அமைச்சரை கௌரவிக்குமுகமாக மேற்படி ச. ச. நிலையத்தினரால் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது இந்த மகஜர் கையளிக்கப்பட்டது. பிரதம விருந்தினராக நியமன எம் பி திரு எம் எவ் சுப்பிரமணியம் திரு ச இராசைசுர ஆகியோர் கலந்து கொண்டனர். நிலையத்தலைவர் திரு வி ஞானப்பிரகாசம் வரவேற்புரை நிகழ்த்தினர். செயலாளர்கள் வி எம் ஜெரூட், ச பிறேடா, எம் ராசேந்திரம். என் குணம் ஆகியோர் அமைச்சருக்கு மாலை சூட்டி வரவேற்றனர்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி அச்சுவேலி கிராமசபையின் இடைக்காடு உபமின்சார நிலையத்தை இன்று கிராம சபைத் தலைவர் திரு. வே. தம்பித்துரை திறந்து வைக்கவுள்ளார்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை கலந்து கொள்கிறார். சுன்னாகம் மின்சார நிலைய பிரதம அத்தியட்சர்களும் கலந்து கொள்வார்.

1961-ம் ஆண்டில் மேற்படி மின்சார நிலைய திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பொழுதும் இப்பொழுதே அதன் வேலைகள் பூர்த்தியாகித் திறக்கப்படுகிறது இவ்வுப மின்சார நிலையத்தால் வளலாய், தம்பாலை, இடைக்காடு ஆகியபகுதிகள் ஒளி மயமாகவுள்ளன.

## 6 நாள் பாடசாலை திட்டம் நிச்சயம்

கோட்டை, வியா வாரத்திற்கு ஆறுநாள் பாடசாலை நடாத்துவது இப்போதைக்கு நிச்சயமாகிவிட்டது என கல்வி மந்திரி அறிவித்துள்ளார். பாடசாலையின் ஆறுநாள் திட்டத்தை வெற்றிகரமாக செயல் படுத்துவதற்கு லங்கா ஜாதிக குரு சங்கம் ஒத்துழைப்புதரக முன்வந்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## டியூட்டரிகளுக்கு கட்டுப்பாடு

கோட்டை, வியாழன் இலங்கையிலுள்ள எல்லா டியூட்டரிகளையும் கண்காணித்துக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது. வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய தொழில்நுட்பச் செயல் முறைப்பயிற்சிகளையே இனி டியூட்டரிகளில் போதிக்க வேண்டுமென அரசாங்கம் கட்டாயப்படுத்துமென்ற தெரியவருகிறது.

## நெடுந்தீவில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

காணாமுனை மீன்பிடித்துறை முகத்தை சீர்படுத்துவதென்றும் மீன்பிடிபற்றி இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. நெடுந்தீவுகிழக்குகாணாமுனை ஆகிய பகுதிகளில் மீன்பிடிச்சங்கங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன.

## பிரச்னை எழவில்லையாம்

கொள்ளுப்பிட்டி, வியா புதிய பஸ் ரயில் சட்டங்களை அமுல் செய்வதில் எதுவித பிரச்னைகளும் எழவில்லையென இ போ ச, ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## கட்டைப் பாவாடைக்கு தடை

திருச்சி, ஜூன் 2 திருச்சியிலுள்ள ஒரு கல்லூரி அதில் பயிலும் மாணவிகள் கையில்லாத சட்டையோ கால்கள் தெரியும் படி அணியும் கட்டைப் பாவாடையோ அணிந்து கொண்டு கல்லூரிக்கு வரக்கூடாதென அறிவித்துள்ளது.

## அமரர் கலைக்குரிசில் கந்தவனம்

கலைக்குரிசில் முருகேசு கந்தவனம் மே 31-ம் திகதி பிற்பகல் தமது 66 வது வயதில் அமைதியாக இயற்கை எய்தினார்.

நெல்லியடியைத் தாயகமாகக் கொண்ட "கலைக்குரிசில்" கந்தவனம் கலையரசு திரு. சொர்ணலிங்கத்துடன் ஆரம்பகாலம்முதல்தோன்றி நாடகத்துறையில் பிரபல்யம் பெற்றவர். கலையை விலையாக விற்காது கலைக்காகத் தமது வாழ்வை அர்ப்பணித்த விரல் விட்டெண்ணக்கூடிய ஒரு சிலரின் முன்னணியில் நின்ற ஒருவர் பலவிதஇன்னல்களுக்கூடாக நெல்லியடி சண்முகானந்த சபை என்னும் நாடக மன்றத்தை நிறுவி பல கருத்தோவியங்களை மேடைகளில் மக்களுக்கு வழங்கிய நலலறிஞன் எந்தப் பாத்திரத்தைக் கொடுத்தாலும் அப்பாத்திரத்தின் இயல் பறிந்துநடித்து "அப்பிளாஸ்" வாங்கிய குணசித்திரநடிகர் கதாநாயகனாகவும் கதாநாயகியாகவும் நடிப்பதில் மட்டுமன்றி சாதாரண பாத்திரத்தையேற்றும் சமயோசிதமாக நடிக்கும் திறமை இவருடன் கூடப்பிறந்தது. இக்காரணங்களுக்காகவே அவருக்கு "கலைக்குரிசில்" என்ற பாராட்டுப் பட்டம் வழங்கப்பட்டது.

பொதுமக்கள் மத்தியில் திரு. கந்தவனம் மிகுந்த செல்வாக்குப் பெற்றுவிளங்கினர் மற்றவர்களின் இன்பதுன்பங்களில் பங்கு கொள்ளும் பரந்த மனப்பான்மை அவரிடம்மிருந்து காணப்பட்டது ஆகவே பொதுமக்கள் அன்புததும்ப அவரைத்தம் தலைவனாகக் கொண்ட தமது பேரன்பைக் காட்ட வேண்டி அவரை "ஐயா" என்றே அழைத்தனர்.

திரு. கந்தவனம் "ஐயா" உலகியலறிவு படைத்தவர் எவரையும் பகைத்துக் கொள்ளாதவர் அரசியல் துறையில் அதிகம் பிரவேசிக்காத திரு. கந்தவனம் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்மென்ற எண்ணம் கொண்டவர். இக்காரணத்தால் மறைந்த கம்யூனிஸ்ட் தலைவரும் தமிழ்ப் பிரதேசத்திலிருந்து முதன்முதலாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட இடது சாரியுமான அமரர் திரு. பொன். கந்தையாவின் நன் மதிப்பிற்குப் பாத்திரமானவர். திரு. கந்தவனம் அமரர் பொன். கந்தையாவின் நெருங்கிய உறவினரென்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனுல் கலைக்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படாத எமது சமுதாயத்தில் அவர் பிறந்து தமது வாழ்க்கையையே கலை வளர்ச்சிக்காக அர்ப்பணித்தார் என்பதில் நாம் பெருமிதமடையலாம்.

— வ. மகாலிங்கம்

# 5000 கடை ஊழியருக்கு சம்பளம் உயர்கிறது

கோட்டை, வியா கோட்டை, புறக்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள சுமார் 5,000 கடை ஊழியர்களுக்கு தொழில் அமைச்சு புதிய சம்பளவிகிதம் ஒன்றை தயாரித்துள்ளது. இதனுல் இவர்களின் தற்போதைய சம்பளத்திலும் பார்க்க கூடுதலான சம்பளம் கிடைக்க விருக்கிறது.

நகரங்களிலுள்ள தொழிலாளர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள இப் பிரத்தியேகமான சம்பளவிகிதம் இவர்களுக்கு பெருநன்மை அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மாதம் 100 ரூபாவிலிருந்து ஆரம்பமாகும் இச் சம்பளவிகிதம் 400 ரூபா வரை உயரும்.

மருதானை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி ஆகிய நகரங்களிலுள்ள கடை ஊழியர்களுக்கும் இதே விகித சம்பளம்வழங்க யோசனைசெய்யப்பட்டு வருகிறது.

றப்பர்ஏற்றுமதி, தென்னை வளர்ப்பு, அச்சுத்தொழில், சோப் தயாரிப்பு, தைத் தொழில், சப்பாத்து தயாரிப்பு, துணி தயாரிப்பு, சிகை அலங்காரநிலையம், ரயர் ரியூப் உற்பத்தி, ரபர், பிளாஸ்ரிக் பொருட்கள் தயாரிப்பு, மருந்துச்சாலை, ரேசர், பிளேட் தயாரிப்பு, குர்ரம்பர், பெயின்ற்தயாரிப்பு, மரத் தளபாடங்கள் தயாரிப்பு, தனியார் துறை மருத்துவநிலையம் ஆகிய நிலையங்களில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கும் சம்பளவிகிதம் உயர்த்தப்படவிருக்கிறது.

# அத்தியடி - ரயில் நிலைய பாதை திறக்கப்படும்?

யாழ்ப்பாணம் வெள்ளி யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்கும் ஸ்ரான்லி வீதிக்குமிடையில் முன்னர் பொதுமக்களின் பாவனையில் இருந்துவந்த பாதையைத் திறந்து விடுவதற்கு ரயில்வேப் பகுதி பொறியியலாளர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாக யாழ்ப்பாணம் மேயர் திரு அல்பிரட் துரையப்பா நேற்றுத் தெரிவித்தார்.

புதிய ரயில் நிலையம் கட்டப்பட்ட பின்னர்பொதுமக்களின் பாவனையிலிருந்து வந்த இந்த "பிறிட்ச்" பாதையை மூடிவிட்டதினுல் ரயில் நிலையத்துக்குப் பின்னுல் அதாவது அத்தியடியில் வசிக்கும் மக்கள் அதிக இடத்தை சுற்றி ரயில் நிலையத்துக்குப் போக வேண்டியிருப்பதாகவும், இப்பகுதி மக்களின் இக்கஷ்டத்தை நீக்குமுகமாக இந்தப்பாதையை மீண்டும் திறந்து விடும்படியும் திரு. துரையப்பா ரயில்வே என்ஜினியர்களிடம் கேட்டிருந்தார் அதற்கு இப்போது அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாக மேயர் கூறினர்.

ரயில் நிலையத்துக்கு முன்னுலுள்ள வீதியைப் பெருப்பித்து அதை இரண்டு வழிப் பாதையாக்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப் படுவதாக திரு துரையப்பா மேலும் கூறினர்.

இ போ-சபை

## வருமானம் உயர்ந்துள்ளதாம்

கோட்டை, வியாழன் இம் மாதம் 1-ந் திகதி இலங்கைப்போக்குவரத்துச் சபையினுல் திட்டமிட்டபடி அரசாங்கத்துக்கு வருமானமாக 40 வீதம் உயர்ந்துள்ளது.

அன்று போயதினமாகையால் பஸ்கட்டணம் உயர்த்தியபின் 40 வீதம் மட்டும் உயர்ந்துள்ளது என்றும் மற்றைய நாட்களில் 65 வீதம் கூடுதலாக உயரும் எனஎதிர் பார்க்கப்படுவதாகவும் இ-போ-ச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

## பண்டத்தரிப்புக்கு மாற்றம்

யாழ்ப்பாணம் வெள்ளி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பதில் அதிபராகக் கடமையாற்றிய திரு. மு கார்த்திகேசன் இன்றிலிருந்து பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிப் பதில் அதிபராக மாற்றப்பட்டுள்ளார் யாழ். இந்த அதிபராயிருந்த திரு என் சபாரத்தினம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திரு கார்த்திகேசன் கடந்த சுமார் 5 மாதகாலமாகப் பதில் அதிபராகக் கடமையாற்றினர் யாழ். இந்துவின் புதிய அதிபராக யாழ். மத்தியகல்லூரி அதிபராயிருந்த திரு ஈ சபாலிங்கம் மாற்றலாகியுள்ளார்,


## அறிவித்தல்

### சீமேந்து விநியோகம்

1-6-71 தொடக்கம், 25 பைகளுக்கு மேற் தேவைப்படுவோர், காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை அதிபரிடம் நேரடியாக விண்ணப்பித்துச் சீமேந்து பெற்றுக்கொள்ளலாம். இதற்குரிய விண்ணப்பப்படிவம், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை விற்பனவு அதிகாரியிடம் ரூபா 1/-க்குக் கிடைக்கும். ஒரு பை சீமேந்தின் தற்போதைய தொழிற்சாலை விலை ரூபா 10/50.

25 பைகள் வரை தேவைப்படுவோர், பிரிவுக் காரியாதிகாரியின் (D. R. O) சிபாரிசுடன் அண்மையிலுள்ள கூட்டுறவுச்சங்கங்களில் தங்கள் தேவைகளைத் தொடர்ந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

அ. பிரான்சிஸ்,
பதில் தொழிற்சாலை அதிபர்.

காங்கேசன் சீமேந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
30-5-1971.



கலா நிலைய
கேம்பிறிக்

WRITING PAD
(லெட்டர் பாட்)

5 1/2" X 8 1/2" — 50 தாள்

1. கோடு இல்லாதது சதம் 70
2. கோடு உள்ளது சதம் 95

வியாபாரிகளுக்கு கழிவு கொடுக்கப்படும்.

'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)
த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்.

# 'இஸ்லாத்தின் பரிசுத்த நாமத்தை மாசுபடுத்த வேண்டாம்'

## எல்லைப்புறக் காந்தி வேண்டுகோள்

வங்காள தேசத்தில் யாஹ்யாகான் ஆட்சி போரை கட்டவிழ்த்து விட்டது, பாகிஸ்தானின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாக்க அல்ல, அதிகாரத்தை இறுகப் பிடித்துக் கொள்ளவே என்று எல்லைப்புற காந்தி பாதுஷா கான் அப்துல் கபார்கான் குற்றஞ் சாட்டியுள்ளார்.

பஞ்சாபைச் சேர்ந்த பெரும் முதலாளிகளும் ராணுவ அதிபர்களும் தங்கள் கரத்தில் அதிகாரத்தைக் கட்டியணைத்துக் கொண்டிருக்கின்றனர். வங்காளம் வேறு எந்தக் குற்றமும் செய்யவில்லை. வங்காளத்தின் குற்றம் அது தேர்தலில் வெற்றியீட்டியதே என்று அவர் காபூலில்விடுத்துள்ள அறிக்கையில் கூறுகிறார்.

முஜிபுர் ரஹ்மானுக்கும் பாகிஸ்தான் அரசாங்கத்துக்குமிடையில் தோன்றிய தகராறை தீர்த்து வைப்பதில்தான் தூதுசெல்ல முன்வந்ததாகவும் கபார்கானின் அறிக்கை கூறுகிறது. ஜலாலாபாதிலுள்ள (ஆப்கானிஸ்தான்) பாகிஸ்தான் கான்ஸலிடம் இதைத் தெரிவித்ததாகவும் அதற்கு பதில் கிடைக்கவில்லையென்றும் அறிக்கை கூறுகிறது.

வங்காள சம்பவங்கள் குறித்து நான் இதுவரை மௌனம் சாதித்தது இப் பிரச்னை அன்பு சமாதானம் மார்க்கத்தில் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்ற காரணத்தினாலேயே.

வங்காளத்து மக்கள் உண்மை முஸ்லிம்களாகும், மற்றும் யாரையும்விட அவர்கள் பாகிஸ்தானுக்கு விசுவாசமுடையவர்களாகும். பிரிவினைக்கு முன்னர் வங்காளத்தில் மாத்திரமே முஸ்லிம் லீக் அரசாங்கம் இருந்தது.

ஜலாலாபாதில் என்னைச் சந்தித்த பாகிஸ்தான் கான்ஸல் வங்காளிகளை பாகிஸ்தானை நிர்மூலம் செய்வதாக கூறினார். டாங்கிகள், யந்திர துப்பாக்கிகள் குண்டுகள் மூலம் எப்படி பாகிஸ்தானை நிர்மாணிக்க முடியுமென்று நான் வினவினேன்.

"பாகிஸ்தான் நாசமாவதாய் இருந்தால் அது பூட்டோ, ஹய்யூம் போன்றோரின் தவறான கொள்கையால் தான் நடைபெறும்.

"சில தினங்களுக்குப் பின்னர் என்னை சந்தித்த கான்ஸல் நான் அறிக்கையொன்றை விடுக்கவேண்டுமென்று கோரினார். அறிக்கைகளால் பயனில்லை வங்காளத்துக்கு தூது செல்ல நான் தயார் என்று கூறினேன்.

"மீண்டும் பாகிஸ்தான் கான்ஸல் என்னை சந்தித்து இஸ்லமாபாத் செல்லும்படி வேண்டினார்.

பாகிஸ்தான் ஸ்தாபிதமான காலத்தில் புஷ்து மக்களுடன் ஆடிய ஆட்டத்தை இன்று வங்காள மக்களுடன் ஆடுகிறார்கள். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்து அசெம்பிளியில் எமக்கு 33 ஆசனங்களும் முஸ்லிம் லீக்குக்கு 17 ஆசனங்களும் இருந்தது. ஆனால் ஜின்னா சாஹிப் எதேச்சாதிகாரமாக எம் மந்திரி சபையை கலைத்து விட்டு முஸ்லிம் லீக்குக்கு அமைச்சரவை அமைக்கும் படி அதிகாரமளித்தார். என்னை பொய்க் குற்றச்சாட்டில் கைது செய்தார்கள்.

முஜிபுர் ரஹ்மான் சாஹிபின் ஆறு அம்சத்திட்டம் பாகிஸ்தானின் ஐக்கியத்தை அச்சுறுத்தியதாய் இருந்தால் அவர்கள் அதனடிப்படையில் போட்டியிட ஏன் அனுமதித்தார்கள்.

# சந்தேக நபர்களை 13 வரை றிமாண்டில்வைக்க உத்தரவு

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் பதில் நீதிபதி திரு. கனகரத்தினம் புங்குடுதீவில் கள் அருந்தியதால் இறந்த ஏழு பேரின் மரணவிசாரணையை இன்று நடத்தினார்.

கள்ளுக்கொட்டிலுக்கு முன்னால் நான்கு பேர் இறந்தார்கள். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இறந்தவரான கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாவில் பணியாற்றும் 33 வயதான நல்லதம்பி வேதாரணியத்தின் மரண விசாரணையின் போது அவரது தகப்பனார் நல்லதம்பி சாட்சியமளித்திருந்தார்.

"குறிப்பிட்ட கொட்டிலிருந்து ஒரு போத்தல் கள்ளு பேரனை விட்டு எடுப்பித்தேன். எனது மகன் இடியப்பத்தைச் சாப்பிட்டு அதிலிருந்து ஒரு கிளாஸ் கள்ளைக் குடித்தார். சிறிது நேரத்தில் மயங்கிவிட்டார். கொட்டிலுக்கு முன்னாலும் சிலர் மயங்கிவிழுந்தார்கள்" என்று சாட்சியத்தில் கூறினார்.

இறந்தவரான வேதாரணியம் தனது மனைவியை கிளிநொச்சிக்குக் கூட்டிச் செல்ல வந்திருந்தாராம். கடைசிக் குழந்தை பிறந்து 40 நாள்தானாம்.

இறந்த 7 பேருடைய பிரேத பரிசோதனைக்கும் உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

சந்தேக நபர்கள் தந்தையும் மகனுமான ராமசாமி நமசிவாயம், நமசிவாயம் நடராசா ஆகிய இருவரையும் இம்மாதம் 13-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி பதில் நீதிபதி உத்தரவிட்டார்.

### பயங்கரவாத நடவடிக்கை:

## சம்பவங்கள் இல்லை; ஆயினும் சரணடைகின்றனர்

கோட்டை, வியாழன்

குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் பயங்கரவாத நடவடிக்கைகள் எந்த இடத்திலும் நடக்காத போதிலும் சரணடையும் பயங்கரவாதிகள் தொகை இப்போது அதிகரித்துள்ளது.

அநுராதபுரம் கொழும்பு குருநாகல் ரம்புக்கனை போன்ற பகுதிகளிலிருந்து பல பயங்கரவாதிகள் சரணடைந்திருக்கிறார்கள்.

குருநாகலில் 9 பேர் சரணடைந்திருக்கிறார்கள் குருநாகலில் 9பேர் சரணடைந்திருக்கிறார்கள், ரம்புக்கனையில் 12 பேர் சரணடைந்திருக்கிறார்கள்.

ரம்புக்கனையிலுள்ள பயங்கரவாதிகள் மறைவிடத்திலிருந்து டைனமைற்றுகளும் பயங்கர ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் போலவே இன்றைய தினமும் பயங்கரவாதிகள் தொடர்பான நடவடிக்கை எதுவுமே இடம் பெறாமல் அமைதியான நாளாகக் கழிந்ததாக ஆயுதப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### ஜூன் 9முதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூரில் நிலவும் கஷ்டமான நிலைமையைப்பொறுத்து அதற்கேற்ப தலைமை ஆசிரியர்களோ, பிராந்திய அதிபர்களோ, பாடசாலை நேரத்தில் மாற்றத்தைமேற் கொள்ளலாம்.

சகல அரசாங்க அலுவலகங்களும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3-30 மணிக்கு முடியும்.

நோன்மதிக்கு முந்திய நாள் நண்பகல் 12 மணிக்கு வேலை முடியும்.

வங்கிகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு முடியும் நோன்மதிக்கு முந்திய நாள் நண்பகல் 12-30 மணிக்கு மூடப்படும்.

கூட்டுத்தாபனங்கள் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகி இப்போதைய வேலைமணித்தியாலத்துக்கு இடை முடிவடையும்.

தனியார் வர்த்தக ஸ்தாபனங்கள் தமக்கு ஏற்ற முறையில் வேலைமணித்தியாலங்களுக்கு ஏற்ப ஆரம்பிக்கும் கடைகள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு முடிவடையும்.

## 42000 பேர் சிகிச்சைபெற்றனர்

கோட்டை, வியாழன்

இதுவரை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் 42,000கண் நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தினம் 500-க்கு மேலான கண்நோயாளர் சிகிச்சை பெறுவதாக ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பகுதி தெரிவித்துள்ளது.


## திருமண அழைப்பு

ஆறுமுகசாமி - ஜெகதாம்பிகை

5-6-71 சனிக்கிழமை காலை 11—12 மணிக்குமிடையில் காங்கேசன்துறை [illegible]கத்தின் (Time keeper) சகோதரரும் பருத்தித்துறை இ. போ. ச. பொதியியல் பகுதியைச் சேர்ந்தவருமான செல்வன் ஆறுமுகசாமிக்கும் கொக்குவில் கிழக்கு கோணவலை ஒழுங்கையைச் சேர்ந்த பென்ஷனர் (Ret- Hospital Overseer) தம்பதிகளின் புதல்வி செல்வி ஜெகதாம்பிகைக்கும் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அனைவரும் அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இடையா. 3152


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 68-ம் இலக்கத்தில் [illegible] அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## 5 இந்தியப் படங்களை சோவியத் வாங்கும்

பம்பாய், ஜூன். 2

இந்தியன் மோஷன் பிக்சர்ஸ் எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷனுக்கும், 'சோவெக்ஸ்போர்ட் பிலிம்' என்ற சோவியத் நிறுவனத்திற்குமிடையே ஓர் ஒப்பந்தம் இங்கு கைச்சாத்தாயிற்று. அதன் படி 206 லட்சம் ரூபாய் பெறுமதியுள்ள ஐந்து இந்தியப்படங்களை சோவியத் யூனியன் வாங்கும்.

அந்தப் படங்களின் பெயர்கள் வருமாறு: மேரா நாம் ஜோக்கர், பந்தன், ஆராதனா, பிரதிபந்தி, மும்பாய் கா ஜவாய்'.

இந்தப் படங்கள் 80 சோவியத்மொழிகளில் 'டப்' செய்யப்படும் அல்லது உபதலைப்புக்களுடன் வெளியிடப்படும். இவை சோவியத் நாடெங்கும் திரையிடப்படும்.

## கந்தசாமி தினம்

கோட்டை, வியாழன்

இம்மாதம் 5ம் திகதி கந்தசாமி தினம் கொண்டாடப்படவிருக்கிறது.

இவ்வருடம் இவ்வைபவம் ஆடம்பர மற்ற முறையில் கொண்டாடப்படவிருக்கிறது. பொதுநிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சு சக நிரந்தர காரியதரிசிகளுக்கும், சகல இலாகாத் தலைவர்களுக்கும் அவர்கள் இலாகாக்களில் உள்ள ஊழியர்கள் யாவரையும் காலஞ்சென்ற திரு கந்தசாமிக்கு அஞ்சலி செலுத்துமுகமாக 2 நிமிட மௌனம் அனுஷ்டிக்க அனுமதிக்க வேண்டுமென அறிவித்துள்ளது.

## இரு திருத்த மசோதா

கொழும்பு, வியாழன்

இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் சட்ட திருத்த மசோதாவும் அடையாள அட்டை திருத்த மசோதாவும் இன்று ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. திரு. மைத்திரிபால சேனநாயக்கா இவைகளைச் சமர்ப்பித்தார். ஜூன் 19ம் திகதி மீண்டும் ஆட்சிமன்றம் கூடும்போது இம்மசோதாக்கள் விவாதிக்கப்படும்.

### பயிற்சிக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யொன்றுக்கு தோற்றவேண்டும். இவ் எழுத்துப்பரீட்சையில் சித்திபெறுபவர்கள், பயிற்சிக்கல்லூரிகளில் சித்தி பெற்றுவெளியேறும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு சமமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களாகவே கருதப்படுவார்கள்.

பயிற்சிக் கல்லூரிகளிலுள்ள இடவசதியின்மைப் பிரச்னை இத்திட்டத்தின் மூலம் தீர்த்துவைக்கப்படுமென்று கல்வி அமைச்சு கருதுகிறது.

## மூவர் குழு

கோட்டை, வியாழன்

அரசாங்க ஆட்சிமன்ற குழு இன்றுகாலை திரு மைத்திரிபால சேனநாயக்கா தலைமையில் கூடியது. பாதுகாப்புப் படையினரின் அத்துமீறிய செயல்கள் குறித்து விசாரணை செய்ய குழுவொன்று நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சர் திரு பி.பி.ஜி கலுகல்ல தலைமையிலான இக்குழுவில் அமைச்சர் திரு ரத்நாயக்கா, திரு செ குமாரசூரியர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## வீட்டுத்தோட்டங்களில் சின்னவெங்காயம்

கோட்டை, வியாழன்

வீட்டுத் தோட்டங்களில் சின்னவெங்காயச் செய்கையை ஊக்குவிக்க விற்பனை இலாகா நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

விற்பனை இலாகா விதை வெங்காயம், வெங்காயச் செய்கைக்கான மற்றும் உதவிகள் ஆகியவற்றையும் அளிக்கவிருக்கிறது.

## தலைமை ஆசிரியர் பயங்கரவாதிகள் தலைவன்

கோட்டை, வியாழன்

ரம்புக்கனைப் பகுதியில் பயங்கரவாத இயக்கத்தின் தலைவராக இருந்ததாகக் கருதப்படும் பட்டதாரி தலைமையாசிரியர் ஒருவரும் மூன்று இளம் பெண்களும் இரண்டு இளைஞர்களும் மாவனல்ல பகுதியிலிருந்து பாதுகாப்புப் படையினராலும் மாவனல்ல பொலிசாராலும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் வசமிருந்து புதிய முறையிலான இயந்திரத் துப்பாக்கி யொன்றும் சுமார் 15 இறாத்தல் எடையுள்ள குண்டு ஒன்றும் பெருந்தொகையான துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

## முனீஸ்வரம் ஆலயத்தில் திருட்டு

கோட்டை, வியா

சிலாபத்திலுள்ள முனீஸ்வரம் கோயிலில் ஆயிரத்து ஐநூறுரூபா பெறுமதியான தங்க ஆபரணம் களவு போய்விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றிப் பொலிஸார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

## மெட்றிக் அளவை முறை

கோட்டை, வியா

இலங்கையில் நிறுவை அளவைகளில் மெட்றிக் முறையை அமுல் செய்யும் வகையில் தேசிய மெட்றிக்கேஷன் சபை விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

## பஸ்கள் வாடகைக்குஇல்லை

பஸ் வண்டிகளை விசேஷ வாடகைக்கோ அல்லது விசேஷ தினங்களுக்காக கூடுதலாகவோ விடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாதென இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

பயங்கரவாதிகளால் அநேக பஸ்கள் நாசமாக்கப்பட்டுள்ளதனாலும் பாதுகாப்புப் படையினரின் சேவைக்காக அதிக பஸ்கள் விடப்பட்டுள்ளதனாலும் பஸ்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே மேற்படி அறிவித்தலை இலங்கைப் போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

## ஜப்பான் உதவியுடன் ஆய்வுகூடம்

கோட்டை, வியாழன்

ஜப்பான் அரசாங்கம் சகல உபகரணங்களும் பொருந்திய மருந்து ஆய்வு கூடம் ஒன்றை இலங்கை சுகாதார திணைக்களத்துக்கு அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

இந்த ஆய்வு கூடம் கொழும்பு அரசாங்க ஆஸ்பத்திரியில் அமைக்கப்படும் என்றும் இக்கூடத்தில் மருந்து ஆராய்ச்சிகளை நடத்துவதற்காக அடுத்த மாதம் டாக்டர் சுஜுகி டாக்டர் குப்பியார் ஒக்கி ஆகிய இரு ஜப்பானிய டாக்டர்களும் இலங்கை வருவார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஜப்பான் அரசாங்கம் இலங்கையிடமிருந்து பாரம்பரியமான மிளகு கறுவா போன்ற பொருட்களை கொள்வனவு செய்யும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.